**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

அசல் வழக்கு எண். 377/2016

இன்று 2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜோயல் ரிச்சர்டு | தொழில் | : ஓட்டுனர் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : லீனஸ் | கிராமம் | : திருப்பூர் |
| வயது | : 50 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 16-10-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**<u>சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. நான் அணைமேடு பகுதியில் வசித்து வருவதை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்தபோது என் வயது 45 என்றால் சரிதான். எனக்கு 45 வயது என்பதால் கடந்த 60 வருட சங்கதிகள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஒரு சங்கத்தின் தலைவராக இருக்கவேண்டும் முதலில் அந்த சங்கத்தின் உறுப்பினராக இருக்கவேண்டும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த சங்க உறுப்பினர் பட்டியலில் என்னுடைய பெயர் இல்லை என்றால் சரிதான்.

2. நான் சங்கத்தின் தலைவர் என்பதைக் காட்ட எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் நான் தலைவர் என்பதற்கு ஆவணமும் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சங்கத்தின் உறுப்பினர் யாரையும் இந்த தாவாவில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். எங்கள் சங்கத்தின் உறுப்பினர் பட்டியலை நான் நீதிமன்றத்தில் குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து விவரத்தில் எத்தனை குடிசைகள் உள்ளது என்று குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரிதான்.

3. கோபால் என்பவர் தாவா சொத்தில் எந்த பகுதியில் எவ்வளவு விஸ்தீரணத்தில் குடிசை அமைத்துள்ளார் என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

கோபாலின் முன்னோர்கள் யார் அவர்கள் எப்போது குடிசை அமைத்தார்கள் என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ராமன் என்பவர் தாவா சொத்தில் எந்த பகுதியில் எவ்வளவு விஸ்தீரணத்தில் குடிசை அமைத்துள்ளார் என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சங்கத்தின் உறுப்பினர்கள் தாவா சொத்தில் எந்த பகுதியில் எவ்வளவு விஸ்தீரணத்தில் குடிசை அமைத்துள்ளார்கள் அவர்கள் முன்னோர்கள் யார், அவர்கள் எப்போது குடிசை அமைத்தார்கள் என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4. சங்கத்தின் தலைவராக வேண்டும் என்றால் ஒவ்வொரு வருடமும் தேர்தல் வைத்து தலைவர் நியமனம் செய்ய வேண்டும் என்றால் சரிதான். 2011ம் ஆண்டுக்கு பிறகு எப்போது தேர்தல் நடந்தது அதன் தலைவர்கள் யார் என்ற விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான். எப்போது தேர்தல் நடந்தது, நான் எப்போது தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்ற விவரமும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எங்கள் சங்கத்தின் By law, Memorandum ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2015ம் ஆண்டு எங்கள் சங்கத்தின் பெயரில் பட்டா வழங்கக் கோரி ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த மனுவில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் இந்த சங்கத்திற்கு எதுவும் உரிமை இருந்தால் உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி தீர்ப்பு பெற்றுக் கொள்ள வேண்டும் என்று உள்ளது என்றால் சரிதான். இந்த தாவாவில் தாவாச் சொத்தின் மீது உரிமை எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவை தான் தாவாவில் வழக்குமூலமாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவுப்படி உரிமை கோராமல் இந்த வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரிதான்.

6. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் ஆட்சியர், கோட்டாட்சியர், வட்டாட்சியர் ஆகியோர் தரப்பினர்களாக உள்ளனர் என்றால் சரிதான். இந்த தாவாவில் அரசு அதிகாரிகளை நான் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். போதிய தரப்பினர்களை கட்சி சேர்க்காத காரணத்தால் இந்த தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5,

வா.சா.ஆ.8 ஆகிய ஆவணங்கள் கந்தப்ப கவுண்டர் என்பவர் பெயரிலுள்ள கிரய ஆவணங்கள் என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.13 ஆவணம் வள்ளிநாயகம் என்பவர் பெயரிலுள்ள கிரய ஆவணம் என்றால் சரிதான். 1993ம் ஆண்டின் வா.சா.ஆ.16 ஆவணம் 3 மற்றும் 5ம் பிரதிவாதிகளின் பெயரிலுள்ள கிரய ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ஆவணத்தில் கண்ட 1 முதல் 11 இலக்கமிட்ட நபர்கள் கந்தப்ப கவுண்டரின் வாரிசுகள் என்ற முறையில் கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 12 முதல் 15 நபர்கள் வள்ளிநாயகத்தின் வாரிசுகள் என்ற முறையில் தான் கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

8. மேற்சொன்ன 1 முதல் 15 நபர்கள் இதர நபர்களுடன் சேர்ந்து 2 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் கிரயம் பத்திரம் செல்லாது ரத்து செய்யப்பட வேண்டும் என்று நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட கிரயம் ஏற்படுத்திக் கொடுத்த நபர்களை இந்த தாவாவில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். போதிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தால் இந்த தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

9. தாவாச் சொத்துக்கள் 2 முதல் 8 பிரதிவாதிகளுக்கு தகுந்த கிரயத்தின்படி பாத்தியப்பட்டடது என்றால் சரியல்ல. எங்கள் சங்கம் 2011ம் ஆண்டு தொடங்கப்பட்டதாக தாவாவில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சங்கம் ஆரம்பிப்பதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட கிரயங்களை பற்றி கேள்வி கேட்க எங்கள் சங்கத்திற்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் 2010ம் ஆண்டு பிறப்பித்த உத்தரவை வழக்குமூலமாக தாவாவில் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த உத்தரவு சங்கம் பதிவு செய்வதற்கு முன்பாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றால் சரிதான்.

10. மேற்படி உத்தரவில் அணைமேடு குடியிருப்போர் நலச்சங்கம் தலைவர் ரவி என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சங்கம் அ.வ.எண்.427/2016 என்ற வழக்கு தாக்கல் செய்து நடத்தி வந்தனர் என்றால் சரிதான். இந்த சங்கத்தின் வழக்குமூலத்தை

எங்கள் சங்கத்தின் வழக்குமூலமாக காண்பிக்க முடியாது என்றால் சரியல்ல. மேற்சொன்ன சங்கத்தின் தலைவர் ரவியையும் உறுப்பினர்களையும் இந்த தாவாவில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அவர்களை தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தால் இந்த தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

11. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ரிட் மனு எண் 6569/2016ல் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் கம்பி வேலி அமைத்துக் கொள்ள உத்தரவிட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு தாவாச் சொத்தின் உரிமையாளர் என்ற முறையில் கம்பி வேலி அமைக்கவும், சுவாதீனத்தில் இருக்கவும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் எங்கள் சங்கமோ, உறுப்பினரோ எந்த காலத்திலும் சுவாதீனத்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளிடம் பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யாக சங்கத்தை ஏற்படுத்தி தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2025.10.16 15:30:41 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.